பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 26 திங்கட்கிழமை 12.12.2022 கதிர் 37

### இது ரகசியம் அல்ல!

இலங்கைத் தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் நடைபெற்றது. அதன் உள்ளாந்தங்களைப் பார்க்கும் முன்னர் ஒரு பழைய 'பிளாஷ்பேக்'!

வலிகாமம் வடக்கில் பல்லாயிரம் ஏக்கர் ☞2

# கூட்டமைப்பின் கட்சிகள் தனித்தனியாக தேர்தலில்!



## ஆராயப்படுகிறது என்கிறார் சுமந்திரன்

(வவுனியா நிருபர் கி.வசந்தரூபன்)

வவுனியா,டிசம்பர் 12

தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிகள் தனித்தனியாக முகம் கொடுப்பது தொடர்பில் தொழில்நுட்ப ரீதியில் ஆராயப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசியகி கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். ☞2

## ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக மீண்டும் சஜித்



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக சஜித் பிரேமதாஸ மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வருடாந்த மாநாடு பொரளை கெம்பல் மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போதே தலைவர் பதவிக்கு சஜித் பிரேமதாஸ ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

அதேவேளை, கட்சியின் பொதுச்செயலாளராக ரஞ்சித் மத்தும பண்டார மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ☞10

## இந்திய மத்தியஸ்தத்தை வலியுறுத்துகிறார் விக்கி

### காலவரையறைக்கும் வற்புறுத்து



யாழ்ப்பாணம்,டிச.12

அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உண்மையான அக்கறையுடன் இருப்பாரானால், இந்திய மத்தியஸ்தத்துடன்பேச்சைஆரம்பிப்பதற்கு அவர் இணங்கவேண்டும். இதனை நான் நாளைய சந்திப்பில் வலியுறுத்துவேன்.

- இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் ☞10

## சஜித் கட்சியின் மாநாட்டில் டலஸ்

### ராஜிதவுக்கும் முன்வரிசை



ஐக்கிய மக்கள் சக்தியின் வருடாந்த மாநாடு, பொரளை கெம்பல் பூங்காவில் நேற்று பெருமளவான ஆதரவாளர்களின் ☞10

## இலங்கையின் நெருக்கடிக்குத் தீர்வுகாண இளைஞர்களின் பங்களிப்பு மிக அவசியம்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

நாட்டின் தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண்பதில் இளைஞர்களின் பங்களிப்பு மிகவும் அத்தியாவசியமானது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார். ☞10



## பூஸா சிறையிலிருந்து மேலும் 4 கைத்தொலைபேசிகள் மீட்பு!

காலி - பூஸா சிறைச்சாலையில் இருந்து கையடக்கத் தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் காவல்துறை விசேட அதிரடிப்படையினர் இணைந்து விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பெரும் குற்றவாளிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரிவில் 4 கையடக்கத் தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டன என்று பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், கடந்த 6ஆம் திகதி மேலும் 5 கைத்தொலைபேசிகள், சிம்கார்டுகள், சார்ஜர்கள் ☞10

## மாடியிலிருந்து தவறி விழுந்து ஒருவர் சாவு

கொழும்பு, நாரஹேன்பிட்டி - பார்க் வீதியிலுள்ள நான்கு மாடிக் கட்டடத்தின் மூன்றாவது மாடியில் இருந்து தவறி விழுந்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளை - ஹாலிஎலதிக்வெல்ல ஹேன ☞10

## கொழும்பு பல்கலை சட்ட பீடத்தில் ஜனாதிபதிக்கு எதிராகக் கூக்குரல்!



கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்ட பீடத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக மாணவர்கள் குழுவொன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், கூவென்று சத்தம் எழுப்பி எதிர்ப்பும் தெரிவித்தது.

கொழும்பு பல்கலைக் கழகத்தின் ☞10

## பறிமுதலான தமிழக மீனவர்களின் படகுகள் வடக்கு மீனவர் அமைப்புகளுக்குத் 'தானம்'!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.12

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய சமயம் பிடித்துத் தடுத்து வைக்கப்பட்ட தமிழக மீனவர்களின் நான்கு படகுகள் வடக்கு மாகாண மீனவர் அமைப்புக்களிற்கு வழங்க நடவடிக்கை இடம்பெறுகின்றது.

இப்படிப் பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகளில் சிலவற்றை வடக்கு மாகாண மீனவர் அமைப்புக்களிற்கு வழங்கி தமிழக மீனவர்களின் ☞10

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் காணிகளை அரசு - இராணுவம் - ஆக்கிரமித்திருக்கின்றமையை எதிர்த்து - ஆட்சேபித்து - சுமார் ஆயிரத்து ஐந்நூறு பேரின் முறைப்பாடுகளோடு உயர்நீதி மன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதில் பிரதான மனுதாரர்களில் ஒருவர் இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா.

இந்த வழக்கு சுமார் பத்து வருடங்க ளுக்கு முந்தியது. அதன் விசாரணைக ளின் போது மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உதவியு டன் ஜனாதிபதி சட்டத்தரணி கனகஈஸ்வ ரன் முன்னிலையாகி அரும்பணியாற்றி வந்தார். இந்த வழக்கில் மாவை சேனா திராசா சார்பாக உத்தரவைப் பெறுவது உட்பட வேறு பல தமிழர் தரப்புகளின் வழக்குகளில்தொடர்ந்துமுன்னிலையாகி வந்தவர் கனகஈஸ்வரன். தமிழ்த் தேசி யக்கூட்டமைப்பு, தமிழரசு ஆகியவற்றின் மூத்த சட்ட ஆலோசகரும் கூட அவர். தமிழரசு சார்பில் அமெரிக்கா வரை பல கூட்டங்களுக்குச் சென்று வந்தவர்.

மேற்படி வழக்கில் நீதிமன்றம் இடைக் கால உத்தரவுகள், தீர்ப்புகள் பலவற்றை வழங்கி விட்டாலும் இன்னும் அதன் விசாரணைகள் முடிவடையவில்லை. கடந்த வாரம் கூட இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் மீண்டும் எடுத்துக் கொள் ளப்பட்ட போது சுமந்திரன் நீதிமன்றில் முன்னிலையாகி இருந்தார். மனுதாரர்க ளின்தரப்புசட்டத்தரணிகளின்பட்டியலை உயர்நீதிமன்றம் அன்றும் பதிந்தது. வழ மையாக முன்னிலையாகும் எல்லா சட் டத்தரணிகளின் பெயர்களும் இருந்தன. ஆனால் அவர்களில் கனகஈஸ்வரனின் பெயர் மட்டும் இல்லை. அவர் இந்த வழக் கில் இனி தொடர்ந்து முன்னிலையாக மாட்டார் என சுமந்திரன் நீதிமன்றத்திற் குத் தெரிவித்தார்

என்ன,ஏது என்று தேடிப் பார்த்தேன். நீண்ட காலம் தமிழரசு கட்சிக்காக வாதா டியவர் கனகஈஸ்வரன். அமிர்தலிங்கம் ஆகியோருக்கு எதிரான 'ட்ரயல் - அட் - பார்' வழக்கில் கூட ஜி.ஜி.பொன்னம்பலத் திற்குக் கனிஷ்ட சட்டத்தரணியாக முன் னிலையாகி, பக்கத்துணையாகநின்றவர் கனகஈஸ்வரன். ஏன் சுமந்திரனை தமிழ ரசுக்கு இழுத்து வந்தவர்களில் முக்கியமா னவரும் அவரே.

தமிழரசு கட்சியின் போக்கைப் பார்த்து, அதனைக் கட்டுக்கோப்பாக - ஒழுங்கு முறையாக - நடத்த வக்கற்ற அதன் தலைவர் மாவை சேனாதிராசா குறித்து விசனம் தெரிவித்த அவர், இனி மேல் தமிழரசுக்காகவோ அதன் தலை வர் மாவை சேனாதிராசாவுக்காகவோ வழக்குகளில் முன்னிலையாவதில்லை என்ற முடிவுக்கு அவர் வந்து விட்டார். அதைத் தமது கனிஷ்ட சட்டத்தரணி ஒரு வர் மூலமாக நேரடியாகவே மாவைக்கு தெரியப்படுத்தியும் இருந்தார் அவர்.

அது மாவை சேனாதிராசாவின் மன தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந் தது என்று நினைக்கிறேன். அந்த நிலைமை ஏற்பட்டமை குறித்து - தமக் கும் தமிழரசுக்குமாக இனிமேல் முன்னி லையாவதில்லை என்று கனகஈஸ்வரன் முடிவு செய்திருக்கின்றமை பற்றி பெரும் விசனத்துடன் நேற்று மத்திய குழுவில் பிரஸ்தாபித்தார் மாவை சேனாதிராசா.

அப்போதுதான் கூட்டத்தில் பங்கு பற் றிய பல முக்கிய பிரமுகர்கள் - கட்சியின் பதில் பொதுச் செயலாளர் வைத்தியர் சத்தி யலிங்க உட்படப் பலர் - மாவைக்கு எதிரா கப் பெரும் வசை பாடினார்கள்.

கட்சியை ஒழுங்கு முறையாக - கட்சி யில் ஒழுக்கத்தை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுத்து, நடத்த முடியாமல் இருக்கின்றமைக்கு மாவைதான் - கட்சித் தலைவர்தான் பிரதான காரணம் என்று பச்சையாக அர்ச்சனை செய்தனர் பலர். வழமை போல அவை எல்லாவற்றை யுமே கேட்டவாறு, அவற்றிற்குப் பதில் அளிக்காமல், பிடித்துவைத்தபிள்ளையார் மாதிரி வாளாவிருந்தார் மாவை.

நீங்கள் என்ன திட்டினாலும் எனக்கு சூடு, சுரணை இல்லை, கட்சித் தலைவர் பதவியில் நீடிப்பது மட்டுமே எனது சித் தாந்தம் என்பது போல நடந்து கொண் டார்.

அங்கு பேசியவை, நடந்தவற்றை யெல்லாம் நான் விலாவாரியாக விவரித் தால், ஏதோ மாவை மீதான தனிப்பட்ட கோபத்தில் - காழ்ப்புணர்வில் - நான் இவ்வாறு இல்லாதவை பொல்லாதவை எல்லாவற்றையும் முன்னிலைப்படுத்து கிறேன் என்று சிலர் விமர்சிக்க புறப்படு வர். அதனால் நிறுத்திக் கொள்கிறேன்.

எது, எப்படியோ நேற்றைய மத்திய குழுக் கூட்டத்தில் கூட கட்சியின் மாநாட் டைக் கூட்டும் திகதி உறுதி செய்யப்பட வில்லை.

அந்தக் கூட்டத்துக்கான திகதியை இழுத்தடிக்க இழுத்தடிக்க, தலைமைப் பதவிக்காலம், உரிய வேளை கடந்தும் கூட மாவையின் மடியிலேயே கிடக்கும் அல்லவா?

மூன்று மாதங்களுக்குள் உள்ளூ ராட்சிசபைத்தேர்தல்நடக்கவாய்ப்புண்டு. அதற்கான அறிவித்தல் இன்னும் மூன்று வாரங்களுக்குள் தேர்தல் ஆணயத்தி னால் வெளியிடப்படும் என்றும் கூறப்படு கின்றது.

அதுவரை கட்சியின் தேசிய மாநாட் டைக் கூட்டாமல் இழுத்தடித்தால், தேர் தல் அறிவிப்பு வந்ததும், அதைக் காட்டி, கட்சி மாநாட்டை மேலும் தள்ளி வைத்து விடலாம், அதன் மூலம் தேர்தல் முடியும் வரை கட்சித் தலைமைப் பதவியில் தானே நீடிக்கலாம், அதேவேளை உள் ளூராட்சி தேர்தல் விவகாரத்தை ஒட்டியும் தலைவராக இருந்து ஒரு 'பிசினஸ்' செய் யலாம் என்று திட்டமிட்டிருப்பார் மாவை யர்.

அதனால் உத்தேச உள்ளூராட்சித் தேர்தலைக் காரணம் காட்டி, தமிழரசின் வருடாந்த மாநாட்டை நடத்தாமல் தம் தலைமையை அவர் நீடித்துக் கொள்வார் என்பது தெளிவானது. பெரும்பாலும் அப்படித்தான் நடக்கும் போல....!

\- மின்னல் -

## கூட்டமைப்பின் கட்சிகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று வவு னியா, குடியிருப்பு கலாசார மண்டபத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற் றது. அதன் பின் நடைபெற்ற ஊடக சந்திப் பிலேயே சுமந்திரன் எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வரு மாறு:-

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. தற்போது ஆரம்பமாகவுள்ளதாகக் கூறப் படும் அரசமைப்பு விடயங்கள் தொடர்பில் கட்சியின் நிலைப்பாடு குறித்து ஆராயப்பட் டது. அத்துடன் உள்ளூராட்சி சபை வட் டார எல்லைகள் மாற்றி அமைக்கப்பட் டமை தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அரசியல் தீர்வு விடயத்தில் ஏற்கனவே தமிழ்த் தேசியக் கட்சிகளோடு பேசி மூன்று விடயங்களை அரசிடம் முன் வைத்துள்ளோம்.

முதலாவதாக அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும், தொடர்ச்சியான நில ஆக்கிர மிப்புக்கள் நிறுத்தப்படவேண்டும், காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப் படவேண்டும்.

இரண்டாவதாக தற்போது அரசமைப் பிலும் சட்டங்களிலும் உள்ள அதிகாரப் பகிர்வு விடயங்கள் முழுமையாக நடை முறைப்படுத்தப்பட்டு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

மூன்றவதாக வடக்கு - கிழக்கில் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு முறையில் - சமஷ்டி கட்டமைப்பில் - உள்ளக சுய நிர்ணய அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்.

இந்த மூன்று விடயங்களையும் சமாந்தரமாக முன்கொண்டு செல்ல வேண்டும்என்றுஅரசிடம்முன்வைத்துள் ளோம்.

சில கால எல்லைக்குள் இந்த மூன்று விடயங்களும் நிறைவேற்றப்பட வேண் டும் எனவும் அரசுக்குச் சொல்லவுள் ளோம்.

அவற்றை ஏனைய கட்சிகளுடனும் பகிர்ந்து ஒற்றுமையான நிலைப்பாட்டை இந்தப் பேச்சின் போது எடுக்கத் தீர் மானித்துள்ளோம்.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் இருக்கும்கட்சிகளைஜனாதிபதிபேச்சுக்கு அழைத்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளின் எல்லை நிர்ணயம் சம்பந்தமாக தற்போது இடம் பெறும்எல்லைமீள்நிர்ணயம்தொடர்பில் ஆராய்ந்துள்ளோம். இந்த எல்லை மீள் நிர்ணயம்சில இடங்களில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. அவற்றை உடனடி யாக ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத் துவதாகவும், அத்தோடு 60 இற்கு 40 என்ற வீதத்தில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதாக உள்ள சட்டம் 70 இற்கு 30 ஆக மாற்றப்பட வேண்டும் என்பதை யும் நாடாளுமன்றத்திலும் அரசிடமும் தெரியப்படுத்துவதாகவும் தீர்மானித்துள் ளோம்.

அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 17, 18 ஆம் திகதிகளில் இடம் பெறும். அங்கு எமது கட்சியின் தேசிய மாநாடு தொடர்பான திகதியைத் தீர்மா னிப்போம்.

தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிகள் தனித்தனியாக முகம் கொடுப்பது தொடர்பில் தொழில் நுட்ப ரீதியில் ஆராயப்பட்டுள்ளது.

வட்டார ரீதியாக ஒரு வீதமும் அதற்கு மேலதிகமாக விகிதாசார முறையில் இன் னொரு வீதமும் சேர்த்துக் கொள்ளப்படு வது தொடர்பில் சென்ற முறை எமக்கு இருக்கும் அனுபவங்களின் அடிப்படை யில் பார்த்து தனித்தனியாகப் போட்டியிட் டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கூடுதலான உறுப்பினர்கள் கிடைக்குமா? இல்லையா? என்கின்ற தொழில்நுட்ப ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளோம். அது தொடர்பில் நாம் சிந்திப்போம்.

ஜனாதிபதியுடனும் நீதி அமைச்சரு டனும் நான் பேசிய போது அரசியல் கைதிகள் 32 பேர் உள்ளனர் என்று தெரி வித்துள்ளனர். அதில் ஜனாதிபதியின் மன்னிப்பில் விடுதலை செய்யப்படக்கூடி யவர்கள் எவரும் இல்லை என்ற கருத் தும் கூறப்பட்டது. எனினும், ஜனாதிபதி அதனை மீள் பரிசீலனை செய்யுமாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியில் அவர்கள் குறித்த கொள்கையில் செயற்படுகின்றனர். அதா வது தலதா மாளிகைக்குக் குண்டு வைத் தவர்கள், மக்கள் அதிகமாக நடமாடும் இடங்களில் குண்டு வைத்தவர்கள், அரசி யல் படுகொலைகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களை விடுவிப்பது இல்லை என முடிவு அவர்களிடம் காணப் பட்டது. எனினும், அவர்கள் நீண்டகாலம் சிறையில் இருந்திருக்கின்றனர் என்ற அடிப்படையில் அதனை மறுபரிசீலனை செய்வது எனத் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலையில் ஏற்பட்டுள்ள பலவித சிக்கல்களைக் கையாள்வதற்கு ஒரு பொறிமுறை அவசியம் என்ற அடிப்ப டையில் சம்பந்தனுடன் பேச்சு இடம்பெற் றது. நானும் மாவை சேனாதிராஜாவும் சம்பந்தனைச் சந்தித்துக் கலந்துரையா டினோம். அவர் அதனை வெவ்வேறு விதத்தில்கையாள்வதாகக்கூறியிருக்கின் றார். எனவே, அந்த விடயங்கள் கையா ளப்படும் என்று நம்புகின்றோம் - என் றார். (100)







# ஜனாதிபதி அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்ட சொகுசு மெத்தை தொடர்பில் விசாரணை வேண்டும்!

## புத்திக பத்திரண வலியுறுத்து



நாடாளுமன்றத்தில் உள்ள ஜனாதிபதியின் அலுவலகத்துக்குக் கொண்டுவரப்பட்ட சொகுசு மெத்தை தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

கடந்த ஜூலை மாதம் 28 ஆம் திகதி நாடாளுமன்றத்துக்குப் பொருள் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. அதனை நாடாளுமன்றம் கொள்வனவு செய்யவில்லை.

தனியார் நிறுவனமொன்றே அதற்கு பணம் செலுத்திக் கொண்டு வந்துள்ளது. ஜனாதிபதியின் அலுவலகத்துக்கே அந்த பொருள் கொண்டு வரப்பட்டுள்ளது. அது தொடர்பான ஆவணங்களில் ஜனாதிபதியின் நாடாளுமன்றச் செயலாளரே கையெழுத்திட்டுள்ளார்.

சொகுசு மெத்தை ஒன்றே இவ்வாறு கொண்டு வரப்பட்டுள்ளது. இப்போது ஜனாதிபதியின் அலுவலகத்தில் அது இருக்கிறது. அது ஓர் அடிக்கும் அதிகமான உயரம் கொண்டது. இவ்வாறான மெத்தையை ஏன் ஜனாதிபதியின் அலுவலகத்துக்குள் கொண்டு வர வேண்டும்.

அங்கே யாரும் தூங்குவதில்லை. அங்கு யாராவது தங்குகிறார்களா? தெரியவில்லை. இது முக்கிய பிரச்சினையாகும். இதனை நாங்கள் போய் பார்க்கலாம். இது ஜனாதிபதியின் பாதுகாப்புடன் தொடர்புடையது. இவ்வாறான பொருளை எப்படிக் கொண்டு வர முடியும்.

இதனால் இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். நாடாளுமன்ற செயலாளர், பாதுகாப்பு தரப்பினருக்கு இந்த விடயம் தெரியுமா? என்று பார்க்க வேண்டும்.

தனியார் நிறுவனத்தின் ஊடாக இவ்வாறு கொண்டு வர முடியுமா? ஜனாதிபதியின் பதவியேற்பின் போது செலவு செய்த தனியார் நிறுவனமே இந்த மெத்தையையும் கொண்டு வந்துள்ளது.

இதனுடன் தொடர்புடைய நபர், அர்ஜுன மகேந்திரனுக்கு அடுத்தபடியான இரண்டாவது நபராக இருக்கலாம். அன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது அவரை ஏமாற்றி அர்ஜுன மகேந்திரன் வெளிநாடுக்குத் தப்பிச் சென்றார்.

இப்போது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கும் போது இரண்டாவது நபர் மெத்தை, கட்டில், கதிரைகளை கொடுத்து செல்ல முயற்சிக்கலாம். – என்றார்.

# வெளிநாட்டு ஊழியர்களினால் 300 கோடி டொலர் நாட்டுக்கு!

கொழும்பு, டிசெ. 12

2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டு ஊழியர்களிடமிருந்து இலங்கைக்கு 300 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேல் பணம் அனுப்பப்பட்டுள்ளது.

நவம்பர் மாதத்தில் தொழிலாளர்களின் பணம் 38 கோடியே 44 லட்சம் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஒக்ரோபர் மாதத்தில் இலங்கைக்கு 35 கோடியே 54 லட்சம் அமெரிக்க டொலர்கள் பணம் அனுப்பப்பட்ட நிலையில் அந்த மாதத்தைவிட 30 மில்லியன் டொலர் அதிகம் என அவர் கூறினார்.

2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 42 வீதம் அல்லது 11 கோடியே 30 லட்சம் டொலர் அதிகரிப்பு எனவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் அனுப்பும் அந்நிய செலாவணிக்கான புதிய ஊக்குவிப்புதிட்டம் கடந்த நவம்பர் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நீதிமன்றப் பாதுகாப்பிலிருந்த பணத்தை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டில் பிரதான பதிவாளர் கைது!

*நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த நான்கு லட்சம் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் மினுவாங்கொடை பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*சந்தேக நபர் மினுவாங்கொடை நீதிவான் மற்றும் மாவட்ட நீதிமன்ற பிரதான பதிவாளர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது மினுவாங்கொடை நீதிவான் திலானி தேனபந்து அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.*

*இதன்படி சந்தேக நபர் எதிர்வரும் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.*




# மரண அறிவித்தல்

## அமரர் திரு. கந்தையா வேலாயுதபிள்ளை

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1937 | 2022 |
| 09 | 12 |
| 14 | 09 |



யாழ்ப்பாணம், தென்மராட்சி – வரணியைப் பிறப்பிடமாகவும் கண்டாவளை, வரணி ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்ட, திரு. கந்தையா வேலாயுதபிள்ளை அவர்கள் 2022.12.09 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா, வள்ளியம்மை மண இணையரின் பாசமிகு மகனும், கண்டாவளையைச் சேர்ந்த, காலஞ்சென்ற சித்தர் குமாரவேலு, சின்னப்பிள்ளை மண இணையரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பராசக்தியின் பாசமிகு கணவரும், விஜயகுமார் (இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முன்னாள் நடத்துனர்), சுகுணகுமாரி, வேணுகுமாரி (முன்னாள் ஆசிரியை, கிளி/முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரி), காலஞ்சென்ற பகீரதகுமார் (மூத்த தளபதி பிரிகேடியர் தீபன்), மற்றும் சிவஞானகுமாரி (ஆசிரியை- யா/வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்), காலஞ்சென்ற சிவகுமார் (லெப்.கேணல்.கில்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அனந்தநீலா, அனந்தசேகரன், லோகநாதன், குமாரி, சிறீதரன் (நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்) ஆகியோரின் மாமனாரும், கோபினா, கோபிசன், அனோஜா, சிறிதரன், அஜிந்த், கீர்த்தனா, அருணியா, அஜந்தூரன், லக்சன், லக்சனா, சாரங்கன், பிரணவன், பிரவீனன், ஆர்த்தி, பகீரதன் ஆகியோரின் பாசமிகு பேரனும், அஞ்சனா, ஆசா, அஸ்மி, அகானா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் 2022.12.12 ஆம் திகதி இன்று காலை 10.00 மணியளவில், முரசுமோட்டையில் அமைந்துள்ள அவரது மூத்தமகனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக, அன்னாரின் குடும்ப மயானமான யாழ் வரணி- குடமியன் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: - குடும்பத்தினர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேர்தல் ஆணையமே பொறுப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் தொடர்பில் இம்மாத இறுதியில் அதற்கான பிரகடனத்தை அறிவிக்கப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. புத்தாண்டுக்கு முன்னர் இது குறித்த அறிவித்தல் நிச்சயம் வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை தேர்தல் ஆணைக்குழுவில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது இம்மாதம் இறுதி வாரத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் தொடர்பில் அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய பெப்ரவரி இறுதி வாரத்தில் தேர்தல் நடத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அறிவிப்பில் மாற்றம் ஏதும் இல்லை என்று அவர் திரும்பத் திரும்பக் கூறுகின்றார். ஆனால் அவரின் இந்த அறிவிப்புக் குறித்து பலத்த சந்தேகங்கள் கிளப்பப்படுகின்றன.

இந்த உள்ளூராட்சித் தேர்தலை அறிவிப்பதற்கான அதிகாரம் சட்டப்படி கடந்த செப்டம்பர் 20ஆம் திகதி தேர்தல் ஆணையத்துக்கு வந்துவிட்டது. ஆனால் கடந்த இரண்டரை மாதங்களாக அதைச் செய்யாமல் இழுத்தடித்து வந்த தேர்தல் ஆணையம். இப்போது இன்னும் மூன்று வாரங்கள் அதை தள்ளிப் போடுகின்றது அது.

இவ்வளவு சர்ச்சைகள், குழப்பங்கள் வந்த பின்னரும், அத்தேர்தலை அறிவிப்பதற்கான கடைசி தினம் வரை வேண்டும் என்றே அவர் இழுத்தடிக்கின்றமை தொடர்பில் கிளப்பப்படும் சந்தேகங்களில் அர்த்தங்கள் உள்ளன.

இந்தத் தேர்தலை நடத்தாமல் தள்ளிப் போடுவதற்கான நடவடிக்கையை அரசு எடுப்பதற்கு இடம் அளித்து, கடைசி நேரம் வரை காலத்தை இழுத்தடித்து, அரசுக்கு உரிய கால அவகாசத்தை அவர் வழங்குகின்றார் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சி வட்டாரங்களின் எல்லை மீளாய்வுக் குழுவை நியமித்துள்ள அரசு அந்த விடயங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை இரண்டு வாரங்களில் வெளியிட்டு –

பின் அதன் அடிப்படையிலான சட்ட திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு வசதியாக, தற்போதைய உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தை இடைநிறுத்தும் சட்ட மூலம் ஒன்றை அவசர சட்டம் மூலமாக விசேட நாடாளுமன்ற அமர்வைக் கூட்டி நிறைவேற்ற அரசு திட்டமிடுவதாகக் கூறப்படுகின்றது.

அதற்குரிய கால அவகாசத்தை அரசுக்கு வழங்குவதற்காக இந்த மாத இறுதி வரை உள்ளூராட்சித் தேர்தலுக்கான அறிவிப்பு விடுப்பதை வேண்டுமென்றே தள்ளிப் போட்டு வருகின்றது சுயாதீன(?) தேர்தல் ஆணையம் என்பது பலரினதும் அபிப்பிராயமாக இருக்கின்றது.

இப்படித் தேர்தல் ஆணையம் காலத்தை இழுத்தடித்ததை வசமாகப் பயன்படுத்தித் தேர்தலை அரசு தள்ளிப்போடுமானால், அத்தேர்தல் நடக்காமல் தள்ளிப் போனமைக்கான முழுப் பொறுப்பையும் தேர்தல் ஆணையமும் அதன் தலைவரும்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

# மக்கள் ஆணை இல்லாத அரசுடன் வேலுகுமார் இணையமாட்டாராம்!

## இராதாகிருஷ்ணன் நம்புகிறார்



நுவரெலியா, டிசெ. 12

வேலுகுமார் எங்களில் ஒருவர். கண்டி மாவட்ட தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றவர். எனவே, மக்கள் ஆணை இல்லாத இந்த அரசுடன் அவர் இணையமாட்டார் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா முத்தமிழ் பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயலாற்றும் குளோபல் கலை கல்லூரியின் பட்டமளிப்பு விழா நுவரெலியாவில் இடம்பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

தமிழ் முற்போக்கு கூட்டணியில் தற்போது உள்ள ஐவரும் பஞ்ச பாண்டவர்கள் போல் அண்ணன் தம்பிமார். எங்களுக்குள் ஏற்படும் சிற்சில பிரச்சினை அண்ணன், தம்பிமாருக்கிடையில் ஏற்படும் குடும்ப பிரச்சினை போன்று தான். அதனை நாம் எங்களுக்குள் பேசித் தீர்த்துக்கொள்வோம்.

அந்த வகையில் இப்பிரச்சினையும் விரைவில் தீரும். இணைந்து பயணிப்போம். ஜனநாயக கட்டமைப்புக்குள் கருத்து முரண்பாடுகள்தான் அமைப்பை சரியாக வழிநடத்த உந்துசக்தியாக அமையும் என்றே நம்புகின்றேன்.

தான் எடுத்த முடிவு சம்பந்தமாக வேலுகுமார் எமக்கு தெளிவுபடுத்துவார் என எதிர்பார்க்கின்றோம்'. – என்றும் அவர் தெரிவித்துள்ளார்

அதேவேளை இனப்பிரச்சினை சம்பந்தமாக பேச்சு நடத்துவதற்காக எமக்கும் ஜனாதிபதி அழைப்புவிடுத்துள்ளார். அந்த சந்திப்பில் நாமும் பங்கேற்போம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் குறித்த இறுதிமுடிவு விரைவில் அறிவிப்பாம்!

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு



ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், ஸ்ரீலங்கன் கேட்டரிங் மற்றும் கிரவுண்ட் சர்வீசஸ் நிர்வாகத்தை ஏதேனும் முதலீட்டாளருக்கு அல்லது தனித்தனியாக வழங்குவது தொடர்பாக விரைவில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அந்த நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கான வழிகாட்டுதல்களை திறைசேரியின் குழுவொன்று வழங்கும் என்றும் அதன் பின்னர் அமைச்சரவை இது தொடர்பில் இறுதித் தீர்மானத்தை எடுக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த நிறுவனங்களின் மறுசீரமைப்பு தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை முதலில் நாடாளுமன்றத்துக்குத் தெரியப்படுத்தப்படும் என்றும் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டார்.

பெருந்தொகையில் புரளும் ஸ்ரீலங்கன் விமான சேவையை மறுசீரமைப்பதைத் தவிர வேறு வழியில்லை எனக் கூறிய அமைச்சர், நிறுவனத்தை மறுசீரமைப்பதை மக்கள் விடுதலை முன்னணி மட்டுமே எதிர்க்கிறது என்றார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் 10 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேல் கடன்பட்டுள்ளதாகவும், விமான சேவைக்கு சொந்தமான அனைத்து விமானங்களும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

# இந்தியா செல்லும் இலங்கையர்களுக்கு ஈ - விசா வசதி வழங்க புதுடில்லி முடிவு!

கொழும்பு, டிசெ. 12

இலங்கையர்களுக்கு மீண்டும் ஈ – விசா அனுமதி வழங்க இந்தியா தீர்மானித்துள்ளது.

இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் இது தொடர்பில் டுவிட்டர் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

உல்லாசப் பயணம், வணிகம், மாநாடுகள் மற்றும் பலவற்றுக்காக இந்தியா செல்ல விரும்பும் இலங்கையர்களுக்கு இந்த வசதி வழங்கப்பட்டுள்ளது.

# அணு ஆயுத சோதனைகள் இல்லாத உலகத்தை உருவாக்கும் இலங்கை!

## வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன தெரிவிப்பு

அணு ஆயுத சோதனைகள் இல்லாத உலகத்தை உருவாக்க இலங்கை உறுதிபூண்டுள்ளது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

வியன்னாவில் நடைபெற்ற 3 ஆவது சிற்பிற்றோ அறிவியல் இராஜதந்திரக் கருத்தரங்கின் உயர்மட்ட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அணு ஆயுத சோதனை தொடர்பாக 1996 ஆம் ஆண்டு கையொப்பமிட்டதற்கு அமைவாக இலங்கை செயற்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.



இந்தக் கருத்தரங்கில் சுமார் 80 நாடுகளில் இருந்து விஞ்ஞானிகள், வல்லுநர்கள், சிவில் சமூகம் மற்றும் தூதுவர்கள் உட்பட 250 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பின் பின்னர் சர்வதேச அணு சக்தி முகவரகத்தின் பணிப்பாளர் நாயகத்தை சந்தித்து, இலங்கைக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்கு அவர் நன்றி தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கும் விமான சேவை

## பரிசீலனை செய்கின்றது அரசு



சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் ஆகக் குறைந்த செலவின் கீழ் விமான சேவைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சர்வதேச விமான சேவைகள் தினம் மற்றும் இலங்கையின் விமான தொழிற்துறை ஆரம்பிக்கப்பட்டு 110 வருடங்கள் பூர்த்தியையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

விமான சேவையானது தனவந்தர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட சேவையாக இருக்கக்கூடாது என்றும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும் பல்வேறு நாடுகளில் வருமானம் குறைந்த மக்களுக்கு குறைந்த செலவில் பயணிக்க கூடிய பாதுகாப்பான விமான சேவைகள் இருக்கின்றன எனவும் எவ்வாறாயினும் எமது நாட்டில் அந்த சேவைகள் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகையால் இதனை பரீசிலித்து சாதாரண மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கும் விமான சேவைகளை வழங்க வேண்டும் என விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

# பாரதியின் 140 ஆவது பிறந்ததினம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்தது!

மஹாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 140 ஆவதுபிறந்ததினநிகழ்வு யாழ். அரசடிவீதியில் அமைந்துள்ள மஹாகவி பாரதியாரின் நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) யாழ். இந்திய உதவித்தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக யாழ். இந்திய உதவித்தூதுவர் ராகேஸ் நட்ராஜ் ஜெயபாஸ்கர் கலந்துகொண்டு பாரதியாரின்உருவச்சிலைக்கானமலர்மாலையைஅணிவித்தார்.



இந்த நிகழ்வில் யாழ். இந்திய உதவித்தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஏ.கிருஸ்ணமூர்த்தி, தமிழ் சங்கத்தின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களுக்கு வேட்புமனுக்களை வழங்க வேண்டாம்!

## மஹிந்த ராஜபக்ஷ உத்தரவு

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்களுக்கு வேட்புமனுக்களை வழங்க வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதியும்,பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்களிடம் விண்ணப்பங்களை கோருவதற்கு தீர்மானித்துள்ளதால் இந்தத் தீர்மானத்தை அவர் எடுத்துள்ளார்.

இதேவேளை இந்த விண்ணப்பங்களை பரிசீலிக்கும் போது, மக்களுடன் இணைந்து செயற்பட்டுள்ளாரா?



கல்வியில் முதன்மை பெற்றுள்ளாரா போன்ற விடயங்களை அவதானிக்குமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் திறமையான இளம் பிரதிநிதிகளை முன்வைப்பதில் பொதுஜன பெரமுன அதிக கவனம் செலுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# சட்ட விரோத தங்கக் கடத்தலைத் தடுக்க வர்த்தமானி வெகுவிரைவில் வெளியிடப்படும்

## ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கூறுகிறார்



விமான நிலையத்தின் ஊடாக இடம்பெறும் சட்ட விரோத தங்கக்கடத்தல் காரணமாக மாதாந்தம் 10 லட்சம் டொலர் இழக்கப்படுகிறது.

எனவே சட்ட விரோத தங்கக் கடத்தலை தடுப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெகுவிரைவில் வெளியிடப்படும். இது எவ்விதத்திலும் வெளிநாடுகளில் தொழில் புரிந்து நாடு திரும்பும் இலங்கையர்களைப் பாதிக்காது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டி தெரிவித்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்ட 40 கோடி ரூபா பெறுமதியான தங்கம் சுங்க பிரிவினரால் கைப்பற்றப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாட்டில் கடும் அந்நிய செலாவணி தட்டுப்பாடு நிலவும் இந்தச் சந்தர்ப்பத்தில் மாதாந்தம் சுமார் 10 லட்சம் டொலரை இழக்கும் வகையில் தங்கக் கடத்தல் இடம் பெறுகின்றமை தெரியவந்துள்ளது.

இவ்வாறான நிலையிலேயே வெள்ளிக்கிழமை கிடைக்கப் பெற்ற இந்திய புலனாய்வு தகவலின் ஊடாக 40 கோடி ரூபா பெறுமதியுடைய தங்கம் சுங்கப்பிரிவினரால் கைப்பற்றப்பட்டது.

இந்தியாவிடமிருந்து இந்தத் தகவல் கிடைக்கப் பெற்றமை இலங்கை மற்றும் இந்தியாவிற்கிடையிலான சட்ட விரோத செயற்பாடுகளைத் தவிர்ப்பதற்கான ஒன்றிணைந்த இணக்கப்பாடாகும்.

இது முக்கியமானதொரு காரணியாகும். இது வரையில் பின்பற்றாத ஒரு வழிமுறையின் ஊடாக இம்முறை தங்கம் கடத்தப்பட்டுள்ளமை எமது சுங்க பிரிவினருக்கும் புதிய அனுபவமாகும்.

சட்ட விரோத தங்கக் கடத்தலை தடுப்பதை இலக்காகக் கொண்டு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஆணையாளரின் அனுமதியின்றி, விமானப் பயணிகள் 22 கரட்டுக்கும் அதிக தரத்திலான தங்கத்தை அணிவதைத் தடை செய்வதற்கு நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நிதி அமைச்சு, சுங்க திணைக்களம், வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் உள்ளிட்டவற்றின் அதிகாரிகள் அடங்கிய குழுவின் ஊடாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கமைய வெளிநாடுகளில் தொழில் புரிந்து நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு இதனால் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாத வகையில் இதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடு தற்போது காணப்படுகின்ற நிலைமையில் இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை பாரிய குற்றமாகும். – என்றார்.

# பொலிஸ் சார்ஜன்டின் குடும்பத்தினர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் தாக்குதல்

## ஆனமடுவவில் சம்பவம்

பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் அவரது குடும்பத்தினர் பயணித்த கார் ஆனமடுவ தத்தேவ குளத்துக்கு அருகில் தாக்குதலுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் குருணாகல் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் பணிபுரியும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் அவரது மனைவியின் தாயாரும் தாக்கப்பட்டனர் என விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஆனமடுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தனது மனைவி, பிள்ளைகள் மற்றும் மனைவியின் தாயாருடன் பொலிஸ் சார்ஜன்ட் ஆனமடுவ நகருக்குச் சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் காரை நிறுத்தியுள்ளனர்.

பின்னர் இந்த மூவரும் காரிலிருந்தவர்களை வாகனத்திலிருந்து வெளியே இழுத்துத் தாக்கியுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர்கள் மூவரும் மோட்டார் சைக்கிளில் வந்துள்ளதுடன் தலைக்கவசம் மற்றும் கை, கால்களால் தாக்கியுள்ளனர் எனவும் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

# தப்பியோடிய விளக்கமறியல் கைதி மடக்கிப் பிடிப்பு!

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தப்பியோடிய விளக்கமறியல் கைதி கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பரந்தன் பகுதியில் மோட்டார் சைக்கிளை திருடியமை, திருடிய மோட்டார் சைக்கிளை வைத்து உரும்பிராய் பகுதியில் சங்கிலி அறுத்தமை, இளவாலை பகுதியில் இரண்டு வீடுகளின் கதவுகளை உடைத்து, வீட்டினுள் நுழைந்து திருடியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்ட இளவாலை பகுதியை சேர்ந்த 25 வயதுடைய இளைஞன், நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டு இருந்தார்.

இந்நிலையில் திடீர் சுகவீனமுற்ற நிலையில் சிறைச்சாலை பாதுகாவலர்களின் பாதுகாப்பில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தப்பியோடி இருந்தார்.

தப்பியோடிய நபரை, சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் மற்றும் பொலிஸார் தேடி வந்த நிலையில், சனிக்கிழமை கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# மனித உரிமை மீறல் தொடர்பில் விழிப்புணர்வு வழங்க வேண்டும்!

## சட்டத்தரணி ரொபின்ஷா நக்கீரன் கோரிக்கை



சட்டத்தரணிகள், கற்றறிந்தவர்கள், சமூக ஆர்வலர்கள் அனைவரும் சாதாரண மக்களுக்கு மனித உரிமை என்றால் என்ன? மனித உரிமை மீறப்பட்டால் நாம் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பான விழிப்புணர்வை வழங்க வேண்டும் என சட்ட உதவி ஆணைக் குழுவின் சட்டத்தரணி ரொபின்ஷா நக்கீரன் தெரிவித்துள்ளார்.

சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட 'அனைவருக்கும் கௌரவம், சுதந்திரம் மற்றும் நீதி' என்னும் தொனிப்பொருளில் சர்வதேச மனித உரிமைகள் தினம் கடந்த சனிக்கிழமை யாழில் உள்ள கியூடெக்கில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

வெள்ளிக்கிழமை மனித உரிமைகள் தினம் கொண்டாடப்பட்டது. இந்த மனித உரிமைகள் கொண்டாடப்படுவதன் அவசியம் நாம் அனைவரும் அறிந்த ஒன்றே.

அதாவது இலங்கையில் ஏற்பட்ட மனித உரிமை மீறல் தொடர்பில் நாம் அனைவரும் அறிந்த போதிலும் அது தொடர்பில் எந்தவித காத்திரமான, எதிர்க்க முடியாத நிலையில் நாம் அனைவரும் காணப்படுகின்றோம்.

எனவே இந்த மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படுவது இனியாவது மக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி மனித உரிமை என்றால் என்ன? மனித உரிமை மீறப்பட்டால் நாம் என்ன செய்ய வேண்டும்.

சாதாரணமாக கற்ற தரப்பினர் மத்தியில் மட்டும் இந்த மனித உரிமைகள் விழிப்புணர்வு காணப்படாமல், சாதாரண மக்களிடத்திலும் இந்த விழிப்புணர்வு காணப்பட வேண்டும்.

எனவே சட்டத்தரணிகள், கற்றறிந்தவர்கள், சமூக ஆர்வலர்கள் அனைவரும் சாதாரண மக்களுக்கும் இந்த மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை வழங்க வேண்டும்.

இனிவரும் காலங்களில் எமது தொப்புள் கொடி உறவுகளுக்கு, எமது சகோதரர்களுக்கு, எமது தமிழ் பேசும் மக்களுக்கு, மனித உரிமைகள் மீறப்படாமல் நிறுத்த இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.

# போராளிகள் நலன்புரிச் சங்கம் யாழில் நேற்று அங்குரார்ப்பணம்!



யாழ்ப்பாணம், டிசெ. 12

போராளிகள் நலன்புரிச் சங்கம் அங்குரார்ப்பண நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) 'இனத்துக்காக உழைத்தவர்களை இன்னலின்றி வாழ வைப்போம்' எனும் தொனிப் பொருளில் அங்குரார்ப்பண நிகழ்வு யாழ். இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது.

சர்வ மத தலைவர்களின் ஆசியுரையோடு இடம்பெற்ற இந்த நிகழ்வில் போராளிகள், சட்டத்தரணி தவராசா மற்றும் சர்வ மத தலைவர்கள், வர்த்தக பிரதிநிதிகள், முன்னாள் போராளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பாடசாலையில் போதைப்பொருள்: ஆயுர்வேத வைத்தியர் கைதானார்!

மல்வத்துஹிரிபிட்டிய, புத்பிட்டிய பாடசாலையொன்றின் சிற்றுண்டிச்சாலையில் போதை மாத்திரைகள் கண்டெடுக்கப்பட்ட சம்பவத்தையடுத்து ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் (வயது – 68) 5 ஆயிரத்து 500 போதை மாத்திரைகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனக் கம்பஹா குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் கிடைத்த தகவலின் அடிப்படையில், மேலும் ஐவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது –

சந்தேக நபரான ஆயுர்வேத வைத்தியர் மருந்தகத்தை நடத்தி வந்துள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு இவரது மருந்தகத்தை பொலிஸார் சோதனையிட்டபோது போதையை ஏற்படுத்தக்கூடியதான 5 ஆயிரத்து 500 மாத்திரைகள் மற்றும் 55 லட்சம் ரூபா பணம் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டதோடு, மேற்படி வைத்தியரும் கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# 25 ஆயிரம் பனை மரக் கள் போத்தல்கள் கொள்கலன் ஒன்று பிரான்ஸுக்கு ஏற்றுமதி!

இலங்கையிலிருந்து 25 ஆயிரம் பனை மரக் கள் போத்தல்கள் அடங்கிய கொள்கலன் ஒன்று பிரான்ஸுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது.

நாட்டில் இருந்து பனை மரக் கள் போத்தல்கள் ஏற்றுமதி செய்யப்படுவது இதுவே முதல் முறை என்றும், இந்த ஏற்றுமதி மூலம் சுமார் 45 ஆயிரம் டொலர்களை சம்பாதித்துள்ளதாகவும் வாரியம் குறிப்பிட்டுள்ளது.

பனை மரக்கள் போத்தல்கள் வடக்கு பிராந்தியத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பனை மரக் கள் போத்தல்கள் தற்போது அமெரிக்கா, கனடா மற்றும் சுவிட்ஸர்லாந்து உள்ளிட்ட பத்து நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கனடாவிற்கு அதிகளவு பனை மரக் கள் விற்பனை செய்யப்படுவதாகவும், எதிர்காலத்தில் தென்னிலங்கையில் உள்ள பல்பொருள் அங்காடிகளில் விற்பனை செய்வது தொடர்பாகவும் ஆலோசித்து வருவதாகவும் பனை அபிவிருத்தி சபை குறிப்பிட்டுள்ளது.

# கட்டுப்பாட்டு விலைகள் இல்லாமையால் பேக்கரி தொழில்துறை கடும் பாதிப்பு!

பேக்கரி பொருள்களுக்கு குறிப்பிட்ட கட்டுப்பாட்டு விலைகள் இல்லாததால் பேக்கரி தொழிலில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன என தென் மாகாண சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலை பல்வேறு மட்டங்களில் இருப்பதால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன என அந்தச் சங்கத்தின் தலைவர் கமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

தற்போது சந்தையில் மாவின் விலை குறைந்துள்ள போதிலும் பேக்கரி உற்பத்தியாளர்கள் பேக்கரி பொருள்களின் விலையைக் குறைப்பதில் கவனம் செலுத்தாதமை வேதனையளிக்கிறது எனவும் கூறியுள்ளார்.

இந்நிலையில் பேக்கரி உற்பத்தியாளர்கள் சந்தையில் குறைந்த விலையில் கிடைக்கும் மாவு தரமற்றது எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# பேராதனை பல்கலையின் முன்னாள் உபவேந்தர் மற்றும் அவரது மகன்மீது மாணவர்கள் தாக்குதல்

பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரான பேராசிரியர் அதுல சேனாரத்னவின் இல்லத்துக்கு முன்பாகக் கடந்த சனிக்கிழமை இரவு 10 மணியளவில் 300 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், பேராசிரியர் மீதும் அவரது மகன் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழக மைதானத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் இரு மோட்டார் சைக்கிள்கள் விபத்தில் சிக்கியதுடன், விபத்துக்கு காரணமான முன்னாள் துணைவேந்தரின் மகன் செலுத்திச் சென்ற கார் தப்பிச் சென்றதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதனையடுத்தே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தகவலறிந்த பேராதனை பொலிஸார் மாணவர்களைக் கலைத்துவிட்டு, பேராசிரியரை பொலிஸ் பாதுகாப்பில் மீட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பேராசிரியர், பேராதனை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், அவரது மகனும் தாக்குதலுக்குள்ளான நிலையில் கண்டி தேசிய வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகிறார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை யாரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை.

# சட்டவிரோத மதுபானத்துடன் ஒருவர் அச்சுவேலியில் கைது!

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஈவினைப் பகுதியில் நான்கரை லீற்றர் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஈவினை பகுதியை சேர்ந்த 52 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தி மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# செக்ஸ் தேடலில் இந்த ஆண்டும் இலங்கை அதிலும் வடக்கு மாகாணம் முதலிடத்தில்!

கூகுள் தேடல் மென்பொருளில் செக்ஸ் என்ற வார்த்தையை அதிகம் தேடிய நாடுகளில் இந்த ஆண்டும் இலங்கை முதலிடத்தைப் பெற்றுள்ளது.

அந்நிறுவனம் வெளியிட்டுள்ள சமீபத்திய தரவின் படி இரண்டாவது இடத்தை வியட்நாமும், மூன்றாவது இடத்தை பங்களாதேஸும் பெற்றுள்ளன.

இலங்கையில் வடக்கு மாகாணத்திலேயே செக்ஸ் என்ற வார்த்தை அதிகமாக கூகுள் மென்பொருளில் தேடப்பட்டுள்ளதாக குறித்த தரவுகள் காட்டுகின்றன.

இதேவேளை இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களை முறையே ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்கள் பெற்றுள்ளன.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## பாரபட்சமற்ற பதிவுகளும் பார்வைகளும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 209**

பாரிஸில் இருந்து தயா எனக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்த போது நடுநிசி கடந்த சாமத்தில் உறங்கிக் கொண்டிருந்தேன். தூக்கக் கலக்கத்தில் என் நினைவில் தங்கியவையைத் தருகிறேன்.

தன்னை, தனது பின்னணியை, நான் அறிந்திருந்தேனா என்பதும், ஏன் தன்னை இந்தப் பதிவில் இழுத்து விட்டிருந்தமைக்கு எந்த ஆதாரமுண்டா, தன்னைப் பற்றி பிறரிடம் சிறிதும் விசாரிக்காமல், பின்னணிகளை விளங்கிக் கொள்ளாமல், பதிவுகளை மேற்கொள்ளக்கூடாது என்பதும், யார் இவற்றை தெரிவித்தார்கள், சம்பந்தப்பட்ட நூலை நான் படித்திருந்தேனா என்பவைகள் தான்.

நூல் கையில் கிடைக்காதமையால் படிக்கவில்லை, ஆனால் பதிவு அனுப்பப்பட்ட முகநூல்களின் பிரதிகளிலும், நடப்பவை பற்றிய ஆதங்கங்களிலும் சிலர் என்னுடன் பேசியவற்றின் ஆதாரங்களில் அமைந்தது. அவர் தனது பின்னணிகளில் ஆர்ப்பாட்டமாக 'யார் தெரியுமா?' என்ற தொனியில் பேசவில்லை. அடக்கமாக, மரியாதைப் பண்புகள் கலந்த வார்த்தை பிரயோகங்கள் நிறைந்திருந்தன.

ஆனால் அவர் 'புலம்பெயர் வரலாற்று செருக்கு' (அங்கம் 203), 'இவை கதைச்சு சரி வருமா?'(அங்கம் 204) என்ற என் பதிவுகளை முழுமையாகப் படித்து, அவற் றின் தாற்பரியங்களைப் புரிந்து கொண்டு பேசியவராகத் தெரியவில்லை. அவரைப் பற்றி எழுதி இருப்பதாகவும், அவரை அப்படிக் குறிப்பதா என்ற கோபம் கலந்த ஆதங்கம்தான, நுனிப் புல் பனி போல அந்த அழைப்புக்குக் காரணமாக இருந்தது என எனது உள்ளுணர்வு கூறியது.

முகநூலில் இருந்தவற்றைப் பதிவிட்டேன், மனத்தாங்கல் ஏதும் ஏற்படுத்தியிருந்தால் அதற்கு வருத்தங்களை தெரிவித்து அந்த சம்பாசணையை முடித்தேன்.

பின்னர் தொடர்புகள் மேற்கொண்ட எனது மற்ற ஐரோப்பிய நகரங்களில் வதியும் நண்பர்களும் புலம்பெயர் அமைப்புகளுக்கும் அதன் சில முக்கிய புள்ளிகளுக்கும் கடிவாளங்கள் தேவை, தன்னிச்சையான போக்குகளை வளர விடுவது தவறு, தமிழ் மக்கள் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும், ஆனால், முன்னைய நாள்கள் போல் ஏகோபித்த தலைமைப் போக்கில் தமிழ் உரிமைப் போராட்டங்களை முன்னெடுக்க முடியாது, நடந்த போராட்டங்களின் வீர, தீர பிரதாபங்களை பேசிக் கொண்டிருக்கலாம், ஆவணப்படுத்தலாம், ஆனால் சர்வதேசங்களுக்கும் புவியியல் அரசியல் நடப்புகளுக்கும் ஏற்ப வழிமுறைகள் காணப்படவேண்டும், அதற்கான நடுநிலையான கட்டமைப்புகள் தேவை - என்று அபிப்பிராயங்கள் கொண்டிருந்தார்கள்.

திரும்பத் திரும்ப இந்தப் பதிவுகளில் எனது எண்ணங்களையும், அவை தமிழ் மக்களது நிலையில் மாத்திரமே இருந்து, நடந்த, நான் அறிந்த, ஈடுபட்டிருந்த நடப்புகளை வரலாற்று குறிப்புகளாகத் தருகிறேன். வாசிப்பவர் சில சமயங்களில் அவற்றை விமர்சனமாகப் பார்த்தாலும், அது அவரவர் பார்வையில் அவரவர்கள் எடுத்துக்கொள்வதேயொழிய, அதனை ஒட்டிய எனது விமர்சனம் அல்ல. எவை தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களை பாதித்தன, அதற்காக எவை நடக்கின்றன, எது யதார்த்தம் என்பதே என்னுடைய நோக்கு.

நான் எழுதியவற்றில் பிரபாகரன், உமாமகேஸ்வரன், அமிர்தலிங்கம், சம்பந்தன், சித்தார்த்தன், செல்வம், சிவாஜிலிங்கம், சுமந்திரன் எனப் பல்வேறு நண்பர்களின் அரசியல் உரிமைப் போராட்ட ஊடாட்டங்களை குறித்தபோது, தமிழ் மக்களுடைய நிலையிலிருந்து நான் அவர்களின் நண்பனாகவோ, அவர்களை அறிந்தவனாகவோ இருந்தும், தயவு தாட்சண்யம் காட்டியவனல்லன். வரலாற்று நிகழ்வில் அவர்களது பங்கினைப் பதிந்தேன். நடப்புகள், அரசியல் பாரபட்சம் என்பவற்றைக் கடந்து அவை பதியப்பட்டன.

1994 இல் சந்திரிகா காலத்தில் இருந்தே புலம்பெயர் மக்களின் மீது வைக்கப்பட்ட பாரிய பொறுப்புக்கள், இவற்றால் சந்திரிகாவின் தீர்வுத் திட்டம் நிராகரிக்கப்பட்டு பின் அவர்களது அழுத் தங்களால் நோர்வேயின் இணக்க பேச்சு வார்த்தைகளுக்கு வழி உண்டானதும், பேச்சு வார்த்தைக்காலங்களில் நடந்தவை, இன்றைய தமிழ் அரசியல்வாதிகளின் முன்னெடுப்புகள், திராணி அற்ற போக்குகளால் திரும்பவும் புலம்பெயர் மக்களிடையே பாரிய பொறுப்புக்கள் விழுகிறது. அவர்கள் சாதுரியமாக யதார்த்தத்தில் முன்னேறாவிட்டால் தமிழ் மக்களுக்கு இருப்பு கேள்விக் குறியாகும் எனக் கோடிட்டேன்.

தொடர்ந்து பார்ப்போம்.

(வளரும்....)


இலக்கு இதழ் 207
நூல் அறிமுகம்
வாராந்த மின்னிதழ் நவம்பர் 05, 2022
14
பிரபாகர பிரவாகம்....
நூல் அறிமுகம்:
எனது மக்களின் விடுதலைக்காக...
வெளியீடு: நீதியான சமாதானத்திற்கும் சனநாயகத்திற்குமான மையம்

### பிரபாகர பிரவாகம்....

'எனது மக்களின் விடுதலைக்காக' தமிழீழத் தேசிய தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்களின் உத்தியோகபூர்வ ஆவணங்களின் தொகுப்பாக உருவாக்கப்பட்ட நூலின் அறிமுக விழா 09/10/2022 அன்று பிரான்சின் சென்றனிலில் அமைந்துள்ள மாநகரசபை மண்டபத்தில் நிகழ்ந்தேறியது. இந்த நிகழ்வானது தமிழர் ஒருங்கிணைப்பு குழு பிரான்சு, தமிழர் புனர்வாழ்வு கழகம் பிரான்சு, நாடுகடந்த தமிழீழ அரசு, தமிழீழ மக்கள் பேரவை, தமிழ் இளையோர் அமைப்பு பிரான்சு, வர்த்தக சங்கத்தினர் பிரான்சு, பாடசாலை பழைய மாணவர் சங்கங்கள், கலைக்கல்லூரிகள் என அனைத்துப் பிரதிநிதிகளும் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வாக மிகவும் சிறப்பாக நடந்து முடிந்திருக்கின்றது. குறிப்பாக 2009 இற்கு பின்னர் பிரான்ஸ் நாட்டில் எமது மக்களின் தேசிய நலனில் அக்கறை கொண்ட அனைவரும் ஒரு மண்டபத்தில் இணைந்துநின்ற அதிசயத்தை நிகழ்த்திய நிகழ்வாக பிரபாகர பிரவாகம் வரலாற்றில் பதிவாகி நிற்கிறது.

தமிழீழ விடுதலை போராட்ட வரலாற்றில் தமிழீழ தேசிய தலைவர் மேதகு. வே. பிரபாகரனால் எழுதப்பட்ட கடிதங்கள், அறிக்கைகள், வாழ்த்துக்கள், வழங்கிய பேட்டிகள், நிழல்படங்கள் என அனைத்து உத்தியோகபூர்வ ஆவணங்களை தொகுத்து ஒரு நூலாக நீதியான சமாதானத்திற்கும் சனநாயகத்திற்குமான நடுவம் சார்பாக அன்றன் பொன்ராசா என்ற தமிழீழ தேசிய செயற்பாட்டாளர் உருவாக்கி இருந்தார்.

இந்த நூலின் உத்தியோகபூர்வ வெளியீட்டை கடந்த 26/11/2021 பிரான்சின் புறநகர் பகுதி ஒன்றில் வெளியிட்டு இருந்த நிலையில், 09/10/2022 அன்று இந்த வரலாற்றுப் பெட்டகத்தை அனைத்து மக்களின் கரங்களிற்கும் கொண்டுசேர்க்கும் முயற்சியாக இந்த நிகழ்வை ஏற்பாட்டாளர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

தமிழீழ மக்கள் அனைவரும் மனதில் சுமக்கும் தங்கள் தலைவனின் வரலாற்றுப் பெட்டகத்தை காணவந்த அனைத்து மக்களும், தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தலைவனோடு நின்று பணிபுரிந்த பலரும் ஒன்றாகநின்று இந்த நிகழ்வை சிறப்பித்த காட்சியின் ஊடாக பிரபாகர பிரவாகத்தை பெருமையோடு கண்ணுற்றார்கள்.

2009 இற்கு பின்னர் புலம்பெயர்ந்த தேசங்களில் எதிரியால் சிதைக்கப்பட்ட எங்கள் இனத்தின் ஒன்றுமையை மீண்டும் ஒரு புள்ளியில் இணைக்கும் சக்தி பிரபாகரன் என்ற ஒற்றைச் சொல்லுக்குள் இருக்கின்றது என்ற உண்மை மீண்டும் நிதர்சனமாக நிகழ்வு இனிதே நிறைவு அடைந்தது.

## ஐக்கிய மக்கள் சக்தியின்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்சியின் தவிசாளராக சரத் பொன்சேகாவும், தேசிய அமைப்பாளராக திஸ்ஸ அத்தநாயக்கவும், பொருளாளராக ஹரினி சில்வாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

ராஜித சேனாரத்ன சிரேஷ்ட உப தவிசாளராகவும், வடிவேல் சுரேஷ் பிரதி செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உமா சந்திரா பிரகாஸுக்கும் பிரதி செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## பூஸா சிறையிலிருந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்பன பூஸா சிறைச்சாலையில் புதைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டன.

சிறைச்சாலை வளாகத்துக்குள் இந்த கையடக்கத் தொலைபேசிகள் கொண்டுவரப்பட்டமை தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று சிறைச்சாலை திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## மாடியிலிருந்து தவறி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இராமலிங்கம் மாணிக்கம் என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் நபர் குறித்த கட்டடத்தில் மது அருந்திக் கொண்டிருந்தார் என்றும், சில தேவைகளுக்காக மூன்றாவது மாடிக்குச் சென்ற போது பாதுகாப்பற்ற இடத்திலிருந்து கீழே விழுந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவருடன் கட்டடத்தில் பணிபுரியும் ஏனைய இருவரும், அவர் இரத்த வெள்ளத்தில் வீழ்ந்து கிடக்கின்றார் என்று கட்டட நிர்மாணப் பணிகளுக்குப் பொறுப்பான நபரிடம் தெரிவித்தனர் என்றும், பின்னர் அவர் வந்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் பிரேத பரிசோதனை கொழும்பு பொலிஸ் வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## பறிமுதலான தமிழக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஊடுருவலைக் கண்காணித்தல் மற்றும் மாவட்டத்தில் இடம்பெறும் அனர்த நடவடிக்கைகளின்போது தற்காப்பு நடவடிக்கைகளின் பயன்படுத்தல் போன்றவற்றிற்கு உபயோகிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

இவ்வாறு கையளிக்கப்படும் படகுகளை மாவட்ட மீனவ அமைப்புக்களைச் சேர்ந்தோர் மயிலிட்டி இறங்குதுறைக்கு வருகை தந்து பார்வையிட்டு அவற்றின் தரம் தொடர்பிலும் பரிசோதனையில் ஈடுபட்டமையோடு இயக்கியும் பரிசோதித்துள்ளனர்.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தின் சம்மேளணம் மற்றும் பருத்தித்துறை முனைச்சங்கம் ஆகியவற்றுடன் மன்னார் மாவட்ட சமாசத்திற்கும் தலா ஒரு விசைப்படகு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட சமயம் கிளிநொச்சி மாவட்டத்தின் சங்கப் பிரதிநிதிகள் சமுகமளிக்காத காரணத்தினால் இதுவரை அவர்களுக்கு உரியது கையளிக்கப்படவில்லை.

இதேநேரம் இவ்வாறு வழங்கப்பட்ட படகுகளும் தரிப்பிட வசதி ஏற்பாடு காரணமாக இதுவரை எடுத்துச் செல்லப்படாது மயிலிட்டித் துறைமுகத்திலேயே தரித்து நிற்கின்றன். இவை விரைவில் எடுத்துச் செல்லப்படவுள்ளன.

## இலங்கையின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தத் தீர்வு அடுத்த 25 வருடங்களைக் கருத்தில்கொண்டதாக அமைய வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைக்கும் அப்பால் சென்று இளைஞர்களின் எதிர்காலத்துக்காக நாட்டைத் தயார்படுத்தத் தான் தீர்மானித்திருக்கின்றார் என்றும் ஜனாதிபதி கூறினார்.

இளைஞர் சந்ததியினருக்கு உதவும் வகையில் அடுத்த 25 ஆண்டுகளுக்குப் பொருந்தும் வகையில், டிஜிற்றல் அபிவிருத்தியுடன் கூடிய எதிர்காலத்துக்கு ஏற்ற தீர்வுகள் குறித்தே நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிக்குத் தீர்வு காணும் முகமாக மேற்பார்வைக் குழுக்களுக்கு இளைஞர்களை நியமிப்பதற்கு அவசியமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மாவட்டம் 306 சி2, இன் லியோ ஆட்சேர்ப்பு மற்றும் லியோ தினக் கொண்டாட்ட நிகழ்வுகள் நேற்று முற்பகல் கொழும்பு ரோயல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நாடு முழுவதுமிருந்து 6 ஆயிரத்து 500 புதிய லியோக்கள் சங்கத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இதில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி இங்கு மேலும் உரையாற்றுகையில்,

2023 ஆம் ஆண்டில் கொண்டாடப்படவுள்ள 75 ஆவது சுதந்திர தின நிகழ்வுடன் இணைந்ததாக இளைஞர்களுக்கான தேசிய அடித்தளமொன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது. நாட்டைக் கட்டியெழுப்ப இளைஞர்களை அதில் இணைந்து கொள்ள வேண்டும்.

உலகளாவிய நெருக்கடியான கால நிலை மாற்றம் தொடர்பான விடயத்தைக் கருத்தில்கொண்டு, அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட காலநிலை மாற்றம் தொடர்பான நிகழ்ச்சிக்கு இளைஞர்கள் ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் அர்த்தமுள்ள செயற்பாட்டுக்கு வழிவகுக்க வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் மாவட்டத் தலைவர் லியோ இந்துனில் உதார பளிஹவதன, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுக்கும் நினைவுச் சின்னங்களைப் பரிசளித்தார். மேலும் லியோ உறுப்பினர்களுக்கான விருதுகளையும் ஜனாதிபதி இதன்போது வழங்கி வைத்தார்.

கொழும்பு மேயர் ரோசி சேனாநாயக்க, கொழும்பு ரோயல் கல்லூரி அதிபர் எம்.வி.எஸ் குணதிலக்க, முன்னாள் மாவட்ட ஆளுநர் லயன் லசந்த குணவர்தன, மாவட்ட ஆளுநர் லயன் பெனட் கமலத் மற்றும் கொழும்பு ரோயல் கல்லூரியின் மாணவத் தலைவன் லியோ கவீ ரத்நாயக்க ஆகியோரும் இந்த நிகழ்விலல் கலந்துகொண்டனர்.

## கொழும்பு பல்கலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வைரவிழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி, கொழும்பு பல்கலைக்கழகத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் உதவும் என்று தெரிவித்தார்.

## இந்திய மத்தியஸ்தத்தை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை பற்றி கலந்துரையாடுவதற்காக நாளை 13ஆம் திகதி சந்திப்பு ஒன்றுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஒற்றை யாட்சியின் கீழான எந்த வொரு தீர்வும் அர்த்தமுள்ள ஒரு தீர்வாக அமையாது என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

ஏற்கனவே அரசமைப்பில் இருக்கின்ற 13 ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த முடியாத நிலையில் இருக்கும் ஜனாதிபதி, அதிகாரப் பகிர்வு தொடர்பில் இந்த நாட்டில் நிரந்தர அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றை ஏற்படுத்தும் வகையில் துணிச்சலானதும் சரியானதுமான ஓர் அணுகுமுறையைக் கையாள்வாரா என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லாத நிலையே இருக்கின்றது.

ஆனால், எது எவ்வாறாக இருந்தாலும், பேச்சுகளுக்கான ஒரு முன்னோடியான 13 ஆம் திகதி பேச்சில் கலந்துகொள்வதும், இந்தப் பேச்சில் கீழ் வரும் சில அடிப்படையான விடயங்களை வலியுறுத்துவதும் அவசியம் என்று கருதுகின்றேன்.

1. அர்த்தமுள்ள ஓர் அதிகாரப் பகிர்வுக்கான பேச்சை (ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அல்லது கூட்டு சமஷ்டி என்பதே எமது நிலைப்பாடு) நாம் வரவேற்கின்றோம்.

2. பேச்சுக்காக மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் அவசியம் என்பதை கடந்த கால வரலாறு உணர்த்துகின்றது.

3. மத்தியஸ்தம் வகிப்பதற்கு இந்தியாவுக்கு அழைப்பு விடுவிக்கப்பட வேண்டும்.

4. பேச்சு ஒரு கால வரையறைக்குள் பேசி முடிக்கப்பட வேண்டும்.

பேச்சுக்கு முன்னதாக கடினமான நிபந்தனைகளை முன்வைத்து ஜனாதிபதியின் அழைப்பை நாம் கண்மூடித்தனமாக புறக்கணிப்பது பொறுப்புள்ள ஒரு செயலாக அமையாது. அத்தகைய செயற்பாடு எமக்கான சர்வதேச ஆதரவையும் பெற்றுத்தராது. ஆனால், தீர்வு தொடர்பில் ஜனாதிபதி உண்மையான அக்கறையுடன் இருப்பாரானால், இந்திய மத்தியஸ்தத்துடன் பேச்சை ஆரம்பிப்பதற்கு அவர் இணங்கவேண்டும். இதனை நான் 13 ஆம் திகதி சந்திப்பில் வலியுறுத்துவேன்.

இந்தப் பேச்சில் ஏனைய எல்லா தமிழ் அரசியல் கட்சிகளும் ஒருமித்து இந்தக் கருத்தை வலியுறுத்த வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு - என்றுள்ளது.

## சஜித் கட்சியின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்பன பூஸா சிறைச்சாலையில் புதைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டன.

சிறைச்சாலை வளாகத்துக்குள் இந்த கையடக்கத் தொலைபேசிகள் கொண்டுவரப்பட்டமை தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று சிறைச்சாலை திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@ gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# வெளிநாட்டில் கற்றுவந்த அரசியல்வாதிகளால் நாடு சீரழிய மகாசங்கம் இடமளிக்கக்கூடாது!

## பேராயர் கர்தினால் மல்கம் வலியுறுத்து



அரசியல்வாதிகள் தமது அதிகாரங்களையும் பதவிகளை தக்க வைத்துக் கொள்வதற்காக இந்நாட்டை பயன்படுத்திக் கொள்வதற்கு இடமளிக்க முடியாது.

வெளிநாடுகளில் கல்வி கற்று வந்த அரசியல்வாதிகளால் நாட்டின் கலாசாரம் சீரழிக்கப்படுவதற்கு மகா சங்கத்தினர் அனுமதித்து விடக்கூடாது என்று பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கம்பஹா – குருண புனித பீற்றர் வித்தியாலயத்தில் புதிய கட்டடமொன்றை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

உயர்மட்டத்திலுள்ளவர்கள் முதல் அடிமட்டத்திலுள்ளவர்கள் என அனைவரும் இன்று மோசடிகளுக்கு அடிமையாகியுள்ளனர்.

இதன் காரணமாக 74 வருடங்களுக்குள் உண்மைகளைப் பொய்யாகவும், பொய்களை உண்மையாகவும் மாற்றுவதற்காக போக்கின் காரணமாகவே நாடு இன்று இந்த நிலைமையை அடைந்துள்ளது.

ஒருபுறம் போதைப்பொருளை உபயோகிப்பவர்களுக்கும், அவற்றை தம்வசம் வைத்திருப்பவர்களுக்கும் மரண தண்டனை வழங்கப்படுகிறது.

ஆனால் மறுபுறம் கஞ்சா பயிர்செய்கையை ஊக்குவிப்பதற்கு முயற்சிக்கப்படுகிறது. வெளிநாடுகளில் கல்வி கற்றவர்கள் இலங்கைக்கு வந்து கசினோக்களையும், இரவு நேர தொழில்களையும் ஊக்குவிக்குமாறு கூறுகின்றனர்.

எமது நாட்டின் நாகரிகம் எங்கே? பௌத்த போதனைகளால் ஒழுக்கம் மிக்க சமூகத்தினர் தோற்றம் பெற்ற இந்த நாட்டின் கலாசாரத்தை சீரழிக்க அரசியல்வாதிகளுக்கு இடமளிக்க முடியாது.

இதுபோன்ற முட்டாள் தனமான செயற்பாடுகளுக்கு இடமளிக்க வேண்டாம் என்று மகா சங்கத்தினரிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

முழு நாட்டையும் விற்றேனும் உண்டு வாழ வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இவர்கள் காணப்படுகின்றனர். ஒவ்வொரு வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் ஒவ்வொரு பகுதிகளையும் வழங்குவதாகக் குறிப்பிடுகின்றனர்.

இவற்றின் மூலம் எவ்வாறு நாட்டைக் கட்டியெழுப்புவது? அரசியல்வாதிகள் தங்களது அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் , பதவிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் இந்த நாட்டை உபயோகித்துக் கொள்ள வேண்டாம்.

சர்வதேச நாணய நிதியமும் , உலக வங்கியும் கூறுகின்றது என்பதற்காக நாட்டுக்கு பொருத்தமற்ற சட்டங்களை நடைமுறைப்படுத்துவது கையேந்தும் செயற்பாட்டைப் போன்றதல்லவா? நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு முழுமையான அறிவு பூர்வமாக புரட்சியே அத்தியாவசியமானதாகும். – என்றார்.

# தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் தவராஜாவின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி!



மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினரும் தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு தொகுதி செயலாளருமான அமரர் வேலுப்பிள்ளை தவராஜாவின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு பொதுநூலக மண்டபத்தில் இலங்கை தமிழரசுக்கட்சியின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில் உயிரிழந்த அமரர் வேலுப்பிள்ளை தவராஜாவின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து தீபச்சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராஜா, மாநகரசபையின் பிரதி முதல்வர் க.சத்தியசீலன், பிரதேச சபை தவிசாளர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# வரி அதிகரிப்பு,தேசிய வளங்களை விற்றலே ஜனாதிபதியின் பொருளாதாரக் கொள்கை!

## எஸ்.எம்.மரிக்கார் எம்.பி. சாடல்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவர் தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிரான மக்களாணையை இன்று ஒன்றுபடுத்துவோம்.

வரி அதிகரிப்பு,தேசிய வளங்களை விற்றல் இதுவே ஜனாதிபதியின் பொருளாதாரக் கொள்கையாக உள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டாவது வருட நிறைவு கூட்டம் பொரள்ளை கெம்பல் மைதானத்தில் இடம்பெற்றது.

அதில் இரண்டு பேரணிகளை சிறப்பாக நடத்தினோம். நாட்டு மக்கள் மீது கரிசனை கொள்ளாது தன்னிச்சையாக செயற்படும் அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் பலம் எவ்வாறு உள்ளது என்பதை அரசாங்கத்துக்கு எடுத்துரைப்போம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும், எமக்கும் இடையில் தனிப்பட்ட வெறுப்பு ஏதும் கிடையாது, பொருளாதாரத்தை நெருக்கடிக்குள்ளாக்கிய ராஜபக்ஷர்களை தொடர்ந்து பாதுகாப்பதற்காக அவர் நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கி, ஜனநாயகத்துக்கு எதிராக செயற்படுகிறார்.

பல்வேறு எதிர்பார்ப்புக்கு மத்தியில் 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அரச நிதியை மோசடி செய்தவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என மக்களுக்கு வாக்குறுதி வழங்கினோம், ஆனால் நல்லாட்சியில் பிரதமர் பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க ஊழல் மோசடியாளர்களுடன் டீல் அமைத்துக் கொண்டார்.

இவரது செயற்பாடுகளால் நாட்டு மக்கள் நல்லாட்சி அரசாங்கத்தை வெறுத்தார்கள். இதன் பின்னணியில் தான் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பொதுஜன பெரமுனவின் பலவீனமான நிர்வாகத்தை நாட்டு மக்கள் இரண்டரை வருட காலத்துக்குள் முடிவுக்கு கொண்டு வந்தார்கள்.தற்போது இவர்களின் பிரதிநிதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி வகிக்கிறார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு மக்களாணை கிடையாது என்பதை மக்கள் 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் ஊடாக உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு அவர் நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்குகிறாரே தவிர, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவில்லை. வரி அதிகரிப்பு, தேசிய வளங்களை விற்றல் இவரது பொருளாதாரக் கொள்கையாக உள்ளது. பொருளாதார மீட்சிக்கான சிறந்த திட்டங்களை நாம் பகிரங்கப்படுத்துவோம். – என்றார்.

# காலநிலை மாற்றத்தால் வரும் பிரச்சினைகளை எதிர்கொள்ள காலநிலை செழுமைத் திட்டம்!

## ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் கருத்து



உலக நாடுகள் முகங்கொடுத்துள்ள காலநிலை மாற்றம் தொடர்பான பிரச்சினைகள் எதிர்காலத்தில் எமது நாட்டையும் பாதிக்கும் என்பதை உணர்ந்ததன் காரணமாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, காலநிலை செழுமைத் திட்டத்தை தயாரித்தார் எனக் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

வளி மாசடைதல் நாட்டு மக்களின் ஆரோக்கியத்தையும் விவசாயத்தையும் பாதிக்கின்றமை, நாட்டின் பொருளாதாரத்தையும் நேரடியாகப் பாதிக்கின்றது.

அதன் காரணமாகவே ஜனாதிபதி பசுமைப் பொருளாதாரம் தொடர்பில் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார் எனவும் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

வளிமண்டலத்தின் தரம் கடந்த இரண்டு நாள்களாக வீழ்ச்சியடைந்து வருகின்றமை தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் விசேட அறிவித்தலொன்றை முன்வைத்தபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள குழப்பநிலை காரணமாக வட இந்தியாவில் நிலவி வரும் வளி மாசடைதல் பிரச்சினைக்கு நமது நாடும் முகம்கொடுக்க நேரிட்டுள்ளது.

இதுபோன்ற நிகழ்வுகள் இடம்பெறலாம் என்பதை ஜனாதிபதி முன்கூட்டியே அறிந்து வைத்திருந்ததன் காரணமாகவே, அவர் காலநிலை மாற்றம் தொடர்பான கருத்தாடல் ஒன்றை ஆரம்பித்தார்.

வளி மாசடைதல் நாட்டு மக்களின் ஆரோக்கியத்தையும் விவசாயத்தையும் பாதிக்கிறது. குறிப்பாக குழந்தைகள் மற்றும் முதியவர்கள் இதனால் பாதிக்கப்படுகின்றனர். எனவே, பாடசாலை மாணவர்களைப் பாதுகாக்க பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. அலுவலகப் பணியாளர்கள் வருகையிலும் வீழ்ச்சி நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவை அனைத்தும் நாட்டின் பொருளாதாரத்தை நேரடியாக பாதிக்கின்றது. அதன் காரணமாகவே ஜனாதிபதி பசுமைப் பொருளாதாரம் பற்றித் தெரிவித்திருந்தார்.

ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான கோப் 27 மாநாட்டில் இதைப் பற்றி கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகம் ஒன்றை இந்நாட்டில் நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதை மிக விரைவில் செய்வோம்.

உலகிலுள்ள அபிவிருத்தியடைந்த நாடுகளின் செயல்பாடுகளால் இலங்கை போன்ற சிறிய நாடுகளே மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி கோப் 27 மாநாட்டிலும் இது தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்தார். நாடு என்ற வகையில் எதிர்காலத்தில் நாம் எதிர்கொள்ள வேண்டிய பாரிய சவால் காலநிலை மாற்றம் என்பதாலேயே ஜனாதிபதி இது தொடர்பில் தொடர்ந்தும் கலந்துரையாடி வருகின்றார். – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.12.2022இல் வெளியிடப்பெற்றது.